கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :

(அ) ஏழைப்பிள்ளைகளுக்கும் கல்வி வசதியற்ற இளைஞர்களுக்கும் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளையும், முன் பயிற்சித்திட்டங்களையும் ஒழுங்குசெய்து பராமரிப்பதுடன் அவற்றை மேம்படுத்தல் ;

(ஆ) விளையாட்டுத்துறை, கணனிப் பயிற்சி, தகவல் கல்வி போன்ற துறைகள் சார்ந்த தொழிற் கல்விப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களைக் கண்டுபிடித்தல் ;

(இ) தேவையிலுள்ள மாணவர்களுக்கு தமிழ், ஆங்கிலம் அத்துடன் வேறு மொழிகளைக் கற்பித்தல் ;

(ஈ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தமது கற்கைகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளுவதற்கு ஆற்றலுடைய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களையும், கடன்களையும் மற்றும் மானியக்கொடைகளையும் உதவி என்றவகையில் வழங்குதல் ;

(உ) இலங்கையிலுள்ள சகல சமூகங்களினதும் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாத்து பேணுவதற்கு ஏதுவாக நூல்நிலையங்களையும், சுவடிக் களஞ்சியங்களையும் ஏனைய கலாசார நிறுவனங்களையும் தாபித்தல் ;

(ஊ) காலஞ்சென்ற ரீ. பீ. தென்னக்கோன் அவர்களின் நினைவுகளை இடையறாது பேணுவதற்கு ஆராய்ச்சி நிறுவனமொன்றையும் அரும்பொருட் களஞ்சியமொன்றையும் தாபித்தலும் ;

(எ) உதவியற்றோர், அங்கவீனர், முதியோர், நோயாளிகள் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கு நலனோம்பு மற்றும் புனர்வாழ்விற்குமாக நிறுவனங்களைத் தாபித்துப் பராமரித்தல் ;

